MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# வள்ளுவரும் உறவியலும்

**முனைவர் ப. விக்னேஸ்வரி**
**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**கோவை- 641105**
**மின்னஞ்சல்: vigneshwari.cbe@gmail.com**
**Phone: 9976576871**

## “Valluvar and Family Relationships”

**Dr P Vigneshwari**
**Associate Professor in Tamil**
**Nehru Arts and Science College**
**Coimbatore - 641105**
**Phone 9976576871**
**Mail id- vigneshwari.cbe@gmail.com**

ABSTRACT:

A mirror-like Thiru Kural that distinguishes good and evil in life based on race. Ayyan Valluvar has explained the methods, morals, and justice related to virtue through the author's relationship. The teacher-student relationship is sacred.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

It is a bridge to future history. It is a symbol of a vibrant society, he says. The relationship between a teacher and a student is like the relationship between parents and children. As time passes, it is like the relationship between a teacher and a disciple. When one reaches a higher level, friendship blossoms. Just as reading a good book brings pleasure and excellence, so too, in the Thiru Kural, it is seen that friendship with a teacher is a pleasure.

Keywords : Thiru Kural – Ethics – Rules – Society – Principles-Teacher

ஆய்வுச் சுருக்கம்

வாழ்வில் நன்மை, தீமைகளை இனம் பிரித்துக்காட்டும் கண்ணாடி திருக்குறள். அறம் தொடர்பான வழிமுறைகளையும் , ஒழுக்கங்களையும், நீதி முறைகளையும் ஆசிரியர் உறவின் மூலம் விளக்கியுள்ளார் அய்யன் வள்ளுவர் . ஆசிரியர் மாணவர் தொடர்பு என்பது புனிதமானது. எதிர்கால வரலாற்றின் பாலமாக அமைவது. வாழ்வாங்கு வாழும் சமுதாயத்தின் அடையாளமாகும் என்கிறார். ஆசிரியர் மாணவர் இடையே உள்ள தொடர்பு என்பது பெற்றோர், பிள்ளைகள் என்ற உறவைப் போன்றது. காலம் செல்லச் செல்ல குரு, சீடன் என்ற உறவைப் போன்றது. உயர்நிலையினை எட்டும் போது நட்பாக மலர்வதும் உண்டு.படிக்க படிக்க நல்ல நூலில் சிறப்புகளை உயர்ந்து இன்பம் தருவது போல, பழகப் பழகப் ஆசிரியர் நட்பு இன்பம் என்பதை திருக்குறளில் காணமுடிகிறது

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

## முன்னுரை:

சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளை தன் நோக்கங்களாகக் கொண்டு சமுதாயத்தைச் சீர்திருத்துவது, மக்களை கல்வியிலும் பிற ஒழுக்கங்களிலும், அறச் செயல்களிலும் மேம்படுத்துவது, சமதர்ம சமுதாயம் மலரச் செய்வது, ஆட்சிச் செலுத்தும் அரசனுக்குத் தேவையான பண்பு நலன்களைக் குறிப்பிடுவது போன்ற குறிக்கோள்களைக் கொண்டு திருக்குறளை யார்த்துள்ளார் வள்ளுவர். மாணவர்கள் நலனை மனதில் பதித்துக் கொண்டு, நடைமுறையில் செயல்முறை வல்லவர்களாகத் தம்மை விட அறிவில் சிறந்தவர்களாக வேண்டும் என்பதனை விருப்பமாகக் கொண்டு கல்வியைக் கற்பிப்பவர் ஆசிரியர். வள்ளுவரும் உறவியலும் என்ற தலைப்பில் ஆசிரியர் மாணவர் உறவு பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**:

**ஆசிரியர், மாணவர், வாழ்க்கை,நற்குணங்கள்,விருந்தினர்.**

### ஆசிரியர், மாணவர், இடையே உள்ள தொடர்பு:

ஆசிரியர் மாணவர் இடையே உள்ள தொடர்பு என்பது பெற்றோர், பிள்ளைகள் என்ற உறவைப் போன்றது. காலம் செல்லச் செல்ல குரு, சீடன் என்ற உறவைப் போன்றது. உயர்நிலையினை எட்டும் போது நட்பாக மலர்வதும் உண்டு.

பெற்றோர் தம்மை விட, தம் பிள்ளைகள் அறிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்று நினைப்பதைப் போல ஆசிரியர்களும், தனது மாணவர்கள் வல்லவர்களாகத் தம்மை விட அறிவில் சிறந்தவர்களாக வேண்டும் என்பது விருப்பமாக இருக்கும் என்ற உணர்வால்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

“தம்மின்தம் மக்கள் அறிவுடையமைமாநிலத்து

மன்னுயிர்க்கெல்லாம் இனிது”

என்றகுறளின் கருத்தாக்கங்கள் வழிஅறிய முடிகின்றது.

**ஆசிரியர், விருந்தினர், இடையே உள்ள தொடர்பு**:

விருந்தினர்களை வரவேற்று விருந்தளித்து அனுப்பிவிட்டு வருகின்ற நிலையை அதே ஆர்வத்தோடு எதிர்பார்த்து விருந்து அளிப்பதைப் போல, மாணவர்கள் கல்வி கற்று, வகுப்புமாறிச் செல்லும்போது, அவர்களை அன்புடன் அனுப்பிவிட்டு அடுத்து புதிதாக வரும் மாணவர்களை எதிர்கொண்டு அறிவு விருந்தளிக்க காத்திருப்பர் என்பதை,

“செல்விருந்துஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத்தவர்க்கு”

என்றகுறளின் வழிஅறிய முடிகின்றது.

வேதம், நீதி நூல்கள், மந்திரங்கள் போன்ற நினைவிலிருந்து மறைந்து மறத்துப் போனாலும், மீண்டும் கற்றுத் தெரிந்து கொள்ளலாம். அதுபோல, மாணவர்களும் கற்ற பாடங்களை மறந்தாலும் திரும்பத் திரும்ப கற்பித்து மீண்டும் நினைவூட்டுபவர் ஆசிரியர்கள். சீடர்கள் தொடர் போன்றதுஆசிரியர் மாணவர் உறவு.

**அகழ்வாரை தாங்கும் நிலம்போல ஆசிரியர் மாணவர் உறவு:**

“**அகழ்வாரை தாங்கும் நிலம்போல** “

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

மாணவர்கள் ஆசிரியரைக் கிண்டலும் கேலியுமாகப் பேசுவார்கள், கேடுகள் கூட செய்வார்கள், பட்ட பெயர்கள் வைப்பார்கள், புறம் கூறுவார்கள் அதுபோல ஆசிரியர் மாணவரைத் திருத்தும் பொருட்டு கடிந்துரைப்பதைப் பல நிலைகளில் எடுத்துரைக்கின்றனர்.

மாணவர் மனதில் பதித்துக் கொண்டு நடைமுறையில் செயல்முறைக் கல்வியைக் கற்பிப்பவர் ஆசிரியர். கூத்தாடும் அரங்கிற்குள் வந்து செல்கின்ற மக்களைப் போன்றவர் மாணவர்கள். ஆசிரியர் ஆடிக் காட்டி புரிய வைக்கும் கூத்தாடி போன்று, கூத்து நடத்துவரைப் போல புரிய வைப்பவர் ஆசிரியர்கள்.கூத்தாட்டு அரங்கம் போன்றது வகுப்பறை. உறுதிப்படுத்தும் என்ற கருத்தாக்கங்கள் வழி,

"கூத்தாட்டு அவைக்குழாத்துஅற்றே பெருஞ்செல்வம்

போக்கும் அதுவிளிந்து அற்று"

என்ற குறள் அமைய இருக்கலாம். ஆசிரியரும், மாணவரும் நண்பர்கள் போலப் பழகி ஒருவருக்கொருவர் மகிழுமாறு கூடுவர். மீண்டும், எப்போது கூடுவோம் என்று நினைக்கும் மாறு பிரிந்து செல்வர் என்பதனை,

"உவப்பு தலைடி உள்ள பிரிதல்

அனைத்து புலவர் தொழில்"

என வள்ளுவர் விளக்குகின்றார்.

"உடையார் முன் இல்லா போல் ஏக்கற்றும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

கற்றார் கடைய கல்லாதவர்"

இருப்பவர் முன் இல்லாதவர் அதனைப் பெறுவதற்கு ஏகத்தோடு நிற்பது போல நின்று, மாணவர்கள் ஆசிரியரிடம் கல்வி கேட்க வேண்டும்என்றும்,

"தாம்இன்புற்றுவது உல**கி**ன்புறகண்டு

காமுறுவர் கற்றிறந்தார்"

உலக உணர்வு உடையவராக உலக நலனின் நாட்டம் கொண்டு மகிழ்ச்சி அடைபவராக இருப்பவர், தமக்கு இன்னும் தருபவை எவையோ அவையே உலக மக்களின் இன்பத்திற்கு காரணமாக இருப்பதைப் படித்த நல்லவர்கள் அவற்றை பெரிதும் விரும்புவர். அவை போல படிக்க படிக்க நல்ல நூலில் சிறப்புகளை உயர்ந்து இன்பம் தருவது போல, பழகப் பழகப் பண்புடையவர் நட்பு இன்பம் தருவது போன்ற.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு"

ஆசிரியர் மாணவர் மீது பற்றும், பாசமும், அக்கறையும் கொண்டு இருக்க வேண்டும். அவருடைய கனிவும், இனிமையான பேச்சும், கற்பிக்கும் ஆற்றலும் மாணவரைக் கவர வேண்டும். மாணவரும், ஆசிரியர் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டு பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர் எல்லா மாணவர்களையும், வேறுபாடு இல்லாமல் ஒரே

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

மாதிரி நடத்த வேண்டும். மாணவர்களும் வேறுபாடு கட்டாமல் நடந்து கொள்ள வேண்டும். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு காட்டாமல் பார்க்காமல் இருவரும் பழக வேண்டும்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்ததொழில் வேற்றுமையான்”

“மேலிருந்தும் மேலல்லார் மேலல்லார்கீழிருந்தும்
கீழல்லார் கிழல்லவர்”

ஆசிரியர் மாணவர் தொடர்பு என்பது புனிதமானது. எதிர்கால வரலாற்றின் பாடமாக அமைவது. வாழ்வாங்கு வாழும் சமுதாயத்தின் அடையாளமாகும்.

**முடிவுரை:**

வாழ்க்கையில் ஆசிரியர் மாணவர்கள் மீது பற்றும், பாசமும், அக்கறையும் கொண்டு இருக்க வேண்டும். அவருடைய கனிவும், இனிமையான பேச்சும், இன்பத்திற்கு காரணமாக அமைகிறது. அத்தகைய வாழ்வில் கடமைகளையும், கடமை உணர்வுடன் செயல்பட்டால் அவர்கள் அடையும் சிறப்புக்களை அழகாகக் கூறியுள்ளார். ஆசிரியர் தன் பிள்ளைக்கு நற்குணங்களை எடுத்துக்கூறும் முக்கியப் பொறுப்பு வகிப்பதை அறிய முடிகின்றது. மாணவன் என்பவன் அச்சமின்றி, ஐயமின்றி கற்க வேண்டும் தனக்குள் எழக்கூடிய சந்தேகங்களை தயங்காமல் கேட்டுத் தெளிவு பெற வேண்டும் என்கின்றார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

சங்கடங்கள் வரும் போது தடுமாறாமாலும், சந்தர்ப்பங்கள் வரும் போது, தடம் மாறாமலும் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெற வேண்டும்.

**துணைநூற்பட்டியல்:**

1. ராஜு செட்டியார் எஸ்
திருக்குறள் ஆராய்ச்சி கட்டுரைகள்
கம்பன் பதிப்பகம், சென்னை 1982
2. சஞ்சீவி நா
திருக்குறள் அமைப்பும் முறையும்
சென்னை பல்கலைக்கழகம் 1972
3. முருகன் ப.
வள்ளுவம் பண்ணோக்குப் பார்வை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை 1991
4. முருகன். ப
குறள்வழி சிந்தனைகள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை 1991

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 E-ISSN 3049-3676 (Online)

5. திருக்குறள் எளிய உரை

தமிழ்ச்செம்மல் புலவர் சி.இராசியண்ணன்

மீனா புத்தக நிலையம்

சென்னை

6. நன்னூல்

புலவர் கோ வில்வபதி

பழனியப்பா பிரதர்ஸ் – 2016